III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S. NO.34/2014

Deposition of witness for the Plaintiff/PW2
Respondent solemnly by Tmt.R.Santhi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 30-01-2018

| | | | |
|---|---|---|---|
| Name | :Tr.Narayanamoorthy | Caste | : |
| Father's Name | :Tr.Govindarajalu | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் 4 முதல் 6 தரப்பில் தொடர்ச்சி- சி பட்டியல் சொத்து பக்தவட்சலம மற்றும் கோவிந்தசாமி கிரையம் பெறும் காலத்தில் சுப்பையா நாயுடு, ராமமூர்த்தி, ஆகியோர்கள் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த 2 கிரைய பத்திரங்களும் வா.சா.ஆ 27மற்றும் 28 கன்டிஷனுடன் கூடிய கிரைய பத்திரங்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த கன்டிஷன் கிரையப் பத்திரத்தின் முன்னிலைக்கு பக்தவட்சலம் மற்றும் கோவிந்தசாமி மேற்சொன்ன கிரையப் பத்திரத்தின கிரையத் தொகையை வட்டியுடன் சேர்த்து 1982ல் தான் கட்டி முடித்தார்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சி பட்டியல் சொத்து இடத்தில் தான் விஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் என்ற செங்கல் சூளை நடந்து வந்தது என்று சொன்னால் சரிதான். அந்த செங்கல் சூளையை பக்தவட்சம் மற்றும் கோவிந்தசாமி சேர்ந்து தனியாக நடத்தி வந்தார்கள் எனறு சொன்னால் சரியல்ல. சி பட்டியல் சொத்தில் நடத்திவரப்பெற்ற செங்கல் சூளை வியாபாரத்திலிருந்து ஒரு பைசா கூட மற்ற வாதிகளுக்கோ பிரதிவாதிகளுக்கோ அவர்கள் கொடுத்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் மற்றும் விஸ்வஜேரி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் கூட்டாக தான் நடத்தி வரப் பெற்றது. விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் மற்றும் விஸ்வஜேரி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் ஒன்றாக தான் நடத்தி வரப்பெற்றது என்பதற்கு ஆதாரமாக இந்த வழக்கில் வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தினை தெரிந்த பிறகு தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் பாகப்பரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொன்னார்கள் அதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதிகள் செய்துள்ள வாதுரையில் விஸ்வஜேரி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் பற்றி எந்த விவரமும் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. சொல்லப்பட்டுள்ளது. வாதுரையை படித்துப் பார்த்துவிட்டு விஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் பற்றி என்ற வார்த்தைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சாட்சி சொல்கிறார். வாதிகள் தன்னுமடைய வாதுரையில் விஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் பற்றி எதுவும் சொல்லாத பட்சத்தில் நான் என்னுடைய சாட்சியத்தில் விஸ்வஜோதி பிரிக்ஸ் இண்டஸ்டிரீஸ் பற்றி பக்கம் 4 பத்தி 14ல் சொல்லியுள்ளேன் என்றாலும் அதனால் என் சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல சி பட்டியல் சொத்துக்களை பக்தவட்சலம் வாரிசுதாரர்களும் கோவிந்தசாமி வாரிசுதாரர்களும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். 1998 வரை சி பட்டியல் சொத்துக்களில் செங்கல் சூளை நடந்து வந்தது என்று சொன்னால் சரிதான். 2011ல் இந்த வழக்கில் உள்ள 11வது பிரதிவாதிக்கு சி பட்டியல் சொத்துக்களில் உள்ள அயிட்டம் எண் 3 சொத்தை 4லிருந்து 6 பிரதிவாதிகளுக்கும் அயிட்டம் எண் 1 மற்றும2 சொத்துக்களை 7 லிருந்து 9 பிரதிவாதிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். 07/02/2009ல் சுப்பையா நாயுடு வாரிசுதாரர்களுக்குள் பாகப் பிரிவினை செய்து கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது என்றாலும் அந்த ஏற்பாட்டில் நானும் இருந்தேன் என்றால் சரிதான். 12 நபர்களுக்குள் பாகப் பிரிவினை செய்ய வேண்டும் என்று ஏற்பாடு எட்டப்பட்டது. 07/09/2009 தேதியில் பாகப் பிரிவினை பத்திரம் தயார் செய்து சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்திற்கு பெண்டிங் டாக்குமெண்ட் எண் 13/2009 என்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் அமைந்தகரையில் உள்ள எப் பட்டியல் சொத்தும் எ பட்டியல் சொத்தில் அயிட்டம் 8,9,10,11 மற்றும் 16 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இல்லாமல் மற்ற குடும்ப சொத்தும் அதில் காட்டப்பட்டுள்ளது. எப் பட்டியல் சொத்து சுப்பையாநாயுடுவின் 4 மகன்கள் பேரில் இருந்த சொத்துக்கள் என்றால் சரிதான். அதே போல் ஏ பட்டியல் சொத்தில் அயிட்டம் 8, 9, 10, 11, 16 சுப்பையாநாயுடுவின் 4 மகன்கள் பேரில் இருந்த சொத்துக்கள் என்றால் சரிதான். அமைந்தகரை சொத்து மற்றும் அயனம்பாக்கத்தில் உள்ள சொத்துக்கள் 4 சகோதார்கள் பேரில் இருந்ததால் அதற்கு அதிகப்படியான முத்திரைத் தீர்வு கட்ட வேண்டுமென்று சார் பதிவாளர் அலுவலகத்தில் கோரப்பட்டது என்றால் சரியல்ல. முத்திரைத் தீர்வையில் பல இலட்சம் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளால் கட்ட முடியாத காரணத்தினால் திரும்ப பெறப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பாகப் பிரிவினை பத்திரம் எந்த காரணத்திற்காக

திரும்ப பெறப்பட்டது என்றால் பதிவு செய்ய சென்ற நேரத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் இடம் காலியாக இருந்ததால் தலைமை எழுத்தர் கூடுதல் பொறுப்பில் இருந்தார். அதைத் தவிர அந்த பத்திரத்தில் 5 சார்பதிவாளர் அலுவலத்தை சேர்ந்த சொத்துக்கள் அதில் இருந்தது. அதனால் 5 சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து என்ஓசி வாங்கி வரச் சொன்னார்கள் அதனால் தான் அந்த பாகப் பிரிவினை பத்திரம் பெண்டிங்கில் வைக்கப்பட்டது. பாகப் பிரிவினை சம்பந்தமான நான் சொன்ன சாட்சியம் வாதிகள் சொன்ன வாதிகள் சொன்ன சாட்சியத்திற்கு முரணாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பாகப் பிரிவினை பத்திரம் பெண்டிங்காக இருந்ததை 1ம பிரதிவாதியான விஜயா தான் திரும்ப பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. தினகரன் தான் திரும்ப வாங்கினார். அந்த விவரத்தை தினகரன் என்னிடம் சொல்லியுள்ளார். என்னுடைய சாட்சியம் படி திரும்ப பெறப்பட்ட ஆவணம் விஜயாவின் வசம் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் ஜோடிக்கப்பட்ட ஆவணம என்று சொல்லியுள்ளேன். என்னுடைய சாட்சியத்தில் திரும்ப பெறப்பட்ட ஆவணம் தினகரன் பெற்றுக் கொண்டார் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஜோடிக்கப்பட்டதின் அடிப்படையில் ஆவணம் திரும்ப பெறப்பட்டது என்று சொல்லி 12 நபர்களில் யாராவது ஒருவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் விஜயா கொடுத்துள்ளார். அந்த புகார் என்ன ஆனது என்று தெரியுமா என்றால் நிலுவையில் தான் உள்ளது. அந்த புகாரில் உண்மை இல்லை என்று புகார் முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல நிலுவையில் தான் உள்ளது. 07/09/2009 தேதியில் ஒரு பாகப் பிரிவினை நடந்தது என்று அந்த பாகப் பிரிவினையின் டிராப்ட் காப்பி வா.சா.ஆ 44 தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 07/09/2009 ல் தாக்கல் செய்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நகல் வா.சா.ஆ.44 கிடையாது என்றால் சரியல்ல அந்த வா.சா.ஆ.44 ஆவணத்தை நான் வாதிக்காக பொய்யாக தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.44 ல் நான் சாட்சிக் கையொப்பம் போட்டேன் என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது என்று சொன்னால் சரிதான். வேலப்பன் சாவடியில் உள்ள சொத்து 45 சென்ட் என்று சொன்னால் ஆவணத்தில் 48 சென்ட் உள்ளது. வேப்பன் சாவடி இ ஷெட்யூல் சொத்தில் 33000 சதுர அடிகள் கொண்ட கட்டுமானம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 1993ல் சுப்பையா நாயுடு இறந்த பிறகு அவரின் ஆண் வாரிசதாரர்களால் அந்த கட்டுமானம் கட்டப்பட்டது என்று சொன்னால் சுப்பையா நாயுடு இருந்த போது கட்டுமான

/ /

பணி ஆரம்பிக்கப்பட்டது. கட்டுமானம் முழுமையாக நிறைவடைந்த நேரத்தில் சப்பையா நாயுடு உயிருடன் இல்லை என்றால் சரிதான். அமைந்தகரையில் உள்ள எப் ஷெட்யூல் சொத்து சப்பையாநாயுடுவின் 4 மகன்களுக்கு சொந்தமானது என்று சொன்னால் டாக்குமெண்ட் 4 பேர் பெயரில் உள்ளது ஆனால் அந்த சொத்தை எல்லோருமே மொத்தமாக அனுபவித்து வருகிறார்கள். சப்பையா நாயுடு இறந்தபிறகு விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ், எப் ஷெட்யூல் சொத்து மற்றும் இ ஷெட்யூல் சொத்தை கோவிந்தசாமி நாயுடு நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எல்லோரும் சேர்ந்து தான் நிர்வாகம் செய்து வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் 1997ம் வருடத்திய அதிகார பத்திரத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து மட்டும் பி.சா.ஆ 6 ஆகும். மேலும் அந்த ஆவணத்தில் 1வது வாதி சுலோச்சனாவின் கையெழுத்து உள்ளது. அந்த பத்திரத்தின்படி அமைந்தகரையில் உள்ள சொத்தை கோவந்தசாமி நிர்வாகம் செய்வதற்காக மற்ற ஆண் வாரிசுதாரர்கள் எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரம என்று சொன்னால் சரிதான். விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிருவனத்தை கோவிந்தசாமி பங்குதாரர் என்ற ஓதாவிலும் மற்றும் இ மற்றும் எப் செட்யூல் சொத்துக்களை சக உரிமையாளர் என்ற ஓதாவிலும் அதிகார முகவர் என்ற ஓதாவிலும் நிர்வாகம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. வேலப்பன் சாவடி இ ஷெட்யூல் சொத்தின் கட்டுமான பணி 1998ல் தான் நிறைவடைந்தது என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. அந்த கட்டுமுமானம் கட்ட அமைந்தகரையில் உள்ள சொத்தை அடமானம் வைத்து கட்டுமானம் கட்டப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த கட்டுமான கட்ட அமைந்தகரையில் உள்ள சொத்தை அடமானம் வைத்து பணம் திரட்டப்பட்டது என்று சொன்னால் பணம் கடன் வாங்கப்பட்டது. அந்த 2 அடமான பத்திரங்களிலும நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த 2 அடமான பத்திரங்களிலும் என் சகோதாரி 1ம் வாதி சுலோச்சனா கையெபத்து போட்டுள்ளார் என்றால் சரிதான் என்னுடைய சாட்சி கையெழுத்துக்கள் பி.சா.ஆ.7, பி.சா.ஆ.8 ஆகும். அதே போல் அந்த கடன்களை பைசல் செய்யும் ரசீதுகளில் நான் சாட்சிக் கையெழுத்து போட்டுள்ளேன். அந்த கையெழுத்துக்கள் பி.சா.ஆ 9 மற்றும் பி.சா.ஆ.10 ஆகும். 2005லிருந்து 12ம் பிரதிவாதி இ ஷெட்யூல் சொத்தில் வாடகைதாரர் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். 2006, 2007 க்கு இடையில் எப் ஷெட்யூலில் உள்ள கடைகளை இடித்து கட்டப்பட்டது என்று சொன்னால் சரிதான். வேலப்பன் சாவடி இ ஷெட்யூல் சொத்தில் வாடகை பாக்கி என்ற வகையில் 30/09/

//

2009ல் ரூ.9,65,000/- 12ம் பிரதிவாதி 1ம் வாதியிடம் கொடுத்தார் என்றால் வாடகை பாக்கி என்று கொடுத்தார் எவ்வளவுகொடுத்தார் என்று தெரியாது. பெருமாள் அகரம் என்ற இடத்தில் சுப்பையாநாயுடுவிற்கு சொந்த 3 ஏக்கர் 22 செண்ட் இடத்தை சுப்பையா நாயுடுவின் வாரிசுதாரர்கள் விற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த தொகையில் வாதிகளுக்கு ரூ.21 இலட்சம் அவர்களுடைய பாகத் தொகையாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் பணம் கொடுத்தார்கள் என்று தெரியும் எவ்வளவு கொடுத்தார்கள் என தெரியாது. அந்த பணத்தை வைத்து வாதிகள் வாலாஜா புல்லரம்பாக்கம் என்ற கிராமத்தில் 4 ஏக்கர் 55 செண்ட் விவசாய நிலத்தை வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தை 2015ல் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். சுப்பையாநாயுடு பெயரில் இருந்த சொத்துக்களிலும் 4 மகன்கள் பெயரில் இருந்த சொத்துக்களிலும் உரிய பங்கை வாதிகளுக்கு இது நாள் கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. விற்றதை தான் கொடுத்தார்கள் அதிலிருந்து வந்த வருமானத்தை கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதேபோல் பி மற்றும் சி ஷெட்யூல் சொத்துக்ள பக்தவட்சலம் மற்றும் கோவிந்தசாமியின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அதில் வாதிகள் எந்த உரிமையும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. அதே போல் எப் செட்யூல் மற்றும் ஏ செட்யூலில் 8, 9, 10, 11 மற்றும் 16 சொத்துக்களில் 10 பிரதிவாதியான வனஜாவிற்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>ம.வி.இல்லை.</u>